# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 149 — 1975 ජනවාරි 31 වැනි සිකුරාද — 1975 01.31

149 ம் இலக்கம் — 1975 ம் ஆண்டு சனவரி மாதம் 31 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. .. | 29 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெறறிடம் .. .. | — | வரவுசெலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன் விற்பனைகள் .. .. | — |
| துணை விதிகள் .. .. | — | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. | 30 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

கெக்கிராவப் பட்டினசபை

பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

**1975 ஆம் ஆண்டுக்கான விசேட தண்ணீர் வரி**

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின்கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினுற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினுல் விதிக்கப்படக்கூடியவாருன அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக கெக்கிராவைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள (நெல்வயல்கள், தரிசு நிலங்கள் தவிர்ந்த) அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஐந்து வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1975 ஆம் ஆண்டுக்குக் கெக்கிராவைப் பட்டினசபையை நிருவகிக்கும் உத்தியோகத்தர் விதித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வி. எஸ். த அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1974 ம் ஆண்டு டிசெம்பர் மீ 27 ந் உ.

1–652/ —3 .0 .75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

கெக்கிராவைப் பட்டினசபை

பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

**1975 ஆம் ஆண்டுக்கான விசேட மலகூடவரி**

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினுற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினுல் விதிக்கப்படக்கூடியவாருன அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாகக் கெக்கிராவைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள (நெல்வயல்கள், தரிசு நிலங்கள் தவிர்ந்த) அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஐந்து வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை 1975 ம் ஆண்டுக்குக் கெக்கிராவைப் பட்டினசபையை நிருவகிக்கும் உத்தியோகத்தர் விதித்துள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வி. எஸ். த அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1974 ம் ஆண்டு டிசெம்பர் மீ 27 ந் உ.

1–652/2—31.0 .75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**

**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.**

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

# நானாவித அறிவித்தல்கள்

## முள்ளிப்பொத்தானை கிராம சபை

### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் திருத்த சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்காணும் அட்டவணையில் காண் போரிபிமிருந்து 1975 ம் ஆண்டுக்கு மாடு அடித்து இறைச்சி விற்பதற்கான உத்தரவுப்பத்திரம் தருமாறு விண்ணப்பம் கிடைத்துள்ளது.

இக்கிராம சபை எல்லேக்குள் வசிப்போர் எவரேனும் மேற்குறிப்பிட்ட உத்தரவுப்பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பின் மறுப்புக்கான காரணங்களை இவ்வர்த்தமானி பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவைக்குமாறு இத்தால் கேட்கப்படுகின்றது.

| இல. | விண்ணப்பகாரர் பெயர் | விலாசம் | தொழில் | தொழில் செய்யும் இடம் |
|---|---|---|---|---|
| 1. | திரு. ச. முகமது மதார் .. .. | 311, யுனிட் 7, முள்ளிப்பொத்தானை | மாட்டிறைச்சிக்கடை நடாத்தல் | 96 ம் கட்டை, கிராம சபை இறைச்சி விற்பனைசாலை |

ஜனாப் வை. அப்துல் ஜபார், ஜே.பி.,
தலைவர்.
முள்ளிப்பொத்தானை கிராமசபை.

முள்ளிப்பொத்தானை கிராம சபை அலுவலகம்,
முள்ளிப்பொத்தானை,
1975 ம் ஆண்டு ஜனவரி மீ 07 ந் வ.

1–696—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

## கிண்ணியாப் பட்டினம்

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 256) 161ம், 163 ம் பிரிவுகளின் கீழ் கிண்ணியாப்பட்டினத்தில் கீழ்க்காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களுக்கு அவற்றிற்கு எதிராக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள கட்டணங்கள் 1975 ம் ஆண்டிற்கு அறவிடப்படும்.

பி. எ. ஜே. காசிநாதர்,
விஷேட ஆணையாளர்,
கிண்ணியாப் பட்டினம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
கிண்ணியாப் பட்டினம்,
கிண்ணியா,
1974 ம் ஆண்டு டிசெம்பர் மீ 12 ந் வ.

### அட்டவணை

| | ரூ. ச. |
|---|---|
| (1) 50 கலன்களுக்கதிகமான அளவில் தேங்காயெண்ணெய் பண்டசாலையில் வைத்திருத்தல் .. .. | 20 00 |
| (2) செங்கற்கள் அல்லது ஓடுகள் சேகரித்து வைத்திருத்தல் | 10 00 |
| (3) வைக்கோல் அல்லது காய்ந்த புல் பண்டசாலைப்படுத்தல் | 10 00 |
| (4) (அ) 100 மூடை அல்லது 400 புசல் நெல்லுக்கதிகமாக பண்டசாலைப்படுத்தல் .. | 200 00 |
| (ஆ) 25 மூடை அல்லது 100 புசல் நெல்லுக்கதிகமாக பண்டசாலைப்படுத்தல் .. .. | 50 00 |
| (5) (அ) உரிமையாளர், தான் மாத்திரமே ஆபரணம் உற்பத்தி செய்தல் அல்லது பழுது பார்த்தல் .. | 40 00 |
| (ஆ) உரிமையாளர், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவியாள்ரை வைத்து ஆபரணம் உற்பத்தி செய்தல் | 125 00 |
| (6) கையினால் இயக்கும் மரமரியும் இடங்கு அல்லது, மரமரியும் ஆலை வைத்திருத்தல் .. .. | 15 00 |
| (7) வெட்டு மரக்காலை வைத்திருத்தல் .. .. | 75 00 |
| (8) விறகுக்காலை வைத்திருத்தல் .. .. | 15 00 |
| (9) எந்திரம் உபயோகிக்காது கொல்லுலையொன்று வைத்திருத்தல் .. .. | 20 00 |
| (10) மொத்த விற்பனைக்காக 15 அந்தருக்கதிகமான அளவில் கோதுமை மா, உப்பு அல்லது சீனி பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல் .. .. | 50 00 |
| (11) வெற்றுப் போத்தல்களையும் வெற்றுச்சாக்குகளையும் பண்டசாலைப்படுத்தல் .. .. | 10 00 |
| (12) பைசிக்கிள் அல்லது மோட்டார் சைக்கிள் திருத்தும் தொழிற்கூடமொன்று வைத்திருத்தல் .. | 20 00 |
| (13) தயாரிக்கப்பட்ட ஆடைவகை உற்பத்தி செய்தல் .. | 15 00 |
| (14) பசளை, அல்லது உரம் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைத்திருத்தல் .. .. | 30 00 |
| (15) தோல் சேகரித்து வைத்திருத்தல் .. .. | 60 00 |
| (16) 100 க்கு மேலான எண்ணிக்கையான பறவைக் கூட்டு கோழிப்பண்ணை அல்லது தொழுவம் வைத்திருத்தல் .. | 25 00 |
| (17) மொத்த விற்பனையின் பொருட்டு பதனழியக்கூடிய உணவுப் பொருட்களையும் பதார்த்தங்களையும் பண்டசாலைப்படுத்திவைத்திருத்தல் .. .. | 30 00 |
| (18) 3 அந்தருக்கதிகமான அளவில் கருவாடு, உப்பிட்ட மீன் அல்லது பதனிட்ட மீன் பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல் | 30 00 |
| (19) மீன் அல்லது இறைச்சி பதனிடுதல், உலர்த்துதல் அல்லது ஐஸ் போடுதல் .. .. | 100 00 |
| (20) 25 அந்தருக்கதிகமான அளவில் சீமெந்து சேகரித்து வைத்திருத்தல் .. .. | 100 00 |
| (21) எலும்புகள் சேர்த்து வைத்திருக்கும் காலை அல்லது சாலை வைத்திருத்தல் .. .. | 25 00 |
| (22) தளபாடங்கள் உற்பத்தி செய்தல் அல்லது பண்டசாலைப் படுத்தி வைத்திருத்தல் .. | 30 00 |
| (23) பிரப்பம் கீற்றுப் பொருட்கள் அல்லது பிரம்புப் பொருட்கள் உற்பத்தி செய்தல் அல்லது பண்டசாலைப்படுத்தி வைத்திருத்தல் .. .. | 15 00 |
| (24) தச்சுத் தொழிற்கூடம் வைத்திருத்தல் .. | 20 00 |
| (25) பானி அல்லது பழரசப் பானங்கள் செய்தல் .. | 10 00 |
| (26) கோப்பி தானியப் பொருட்கள், பருப்பு வகைகள் கறிச்சரக்குகள் அல்லது கோதுமை அரைத்தல் .. | 50 00 |
| (27) கோட்டாவின்றி நெல் குத்தும் ஆலை வைத்திருத்தல்— .. | |
| (அ) ஒரு ஹல்லர் பாவிப்பதற்கு .. | 100 00 |
| (ஆ) இரண்டும் அதற்கு மேற்படவும் ஹல்லர் பாவிப்பதற்கு | 125 00 |
| (28) கோட்டாவுடனான நெல் குத்தும் ஆலை வைத்திருத்தல்— | |
| (அ) ஒரு ஹல்லர் பாவிப்பதற்கு .. | 175 00 |
| (ஆ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஹல்லர் பாவிப்பதற்கு .. .. | 250 00 |
| (29) டயர்களையும் ரியூப்களையும் வல்கனைஸ் செய்யும் தாபனம் வைத்திருத்தல் .. .. | 15 00 |
| (30) ஒளிப்படக் கலைக்கூடம் வைத்திருத்தல் .. | 50 00 |
| (31) உலர சலவை செய்யும் அல்லது சாயமூட்டும் தாபனம் வைத்திருத்தல் .. .. | 10 00 |
| (32) பற்றறிகளுக்கு மின்னூட்டுதல் அல்லது பழுது பார்த்தல் .. | 20 00 |
| (33) மோட்டார் வாகனங்களைத் திருத்தும் அல்லது அவற்றிற்கு நன்னிலைச் சேவையாற்றும் வேலைத்தலம் வைத்திருத்தல் | 40 00 |
| (34) தகரக்களம் வேலை வைத்திருத்தல் .. | 10 00 |
| (35) பெற்றோல், டீசல், எண்ணெய், வேறு பிற எண்ணெய் பண்டசாலை வைத்திருக்கும் இடமொன்று வைத்திருத்தல் .. | 120 00 |
| (36) மின்சாரக்கடை அல்லது வானொலிப் பெட்டிகள் திருத்தும் கடை அல்லது வானொலிப் பெட்டித் தொழிற்கூடம் வைத்திருத்தல் .. .. | 20 00 |
| (37) அப்பச்சாலை (பேக்கரி) வைத்திருத்தல் .. | 30 00 |
| (38) சாப்பாட்டுக்கடை வைத்திருத்தல் .. | 25 00 |
| (39) தேனீர் அல்லது கோப்பிக்கடை வைத்திருத்தல் .. | 20 00 |
| (40) சிகை அலங்கார நிலையம் வைத்திருத்தல் .. | 25 00 |
| (41) இறைச்சிக்கடை வைத்திருத்தல் .. | 10 00 |
| (42) ஊன்விணைஞர் உத்தரவுப்பத்திரக் கட்டணம் .. | 25 00 |
| (43) மருந்துக்கடை வைத்திருத்தல் .. | 20 00 |

1–770—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

### மட்டக்களப்பு மாநகரம்

#### 1975 ம் ஆண்டிற்கான சோலைவரி இடாப்புக்கள்

மாநகரசபைகளின் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 252) 235 (1) ம் பிரிவின் படி இம் மாநகரத்தின் 1975 ம் ஆண்டிற்கான சோலைவரி இடாப்புகள் பொதுமக்கள் பார்வைக்கு காரியாலய நேரத்தில் மட்டக்களப்பு மாநகர அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

கே. பீ. குணரத்தின,
மாநகர அணையாளர்,
மட்டக்களப்பு.

மாநகர அலுவலகம்,
மட்டக்களப்பு,
1975 ம் ஆண்டு சனவரி மீ 03 ந் உ.

1-767—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

### சின்னச் செட்டிக்குளம் மேற்கு கிராமசபை

#### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல், 1975

இறைச்சிக்காரர் பற்றிய கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 272) 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்க்காணப்படும் அட்டவணையில் காணப்பவரிடம் இருந்து 1975 ஆண்டிற்கு இறைச்சிக்கடைக்கு உத்தரவுப்பத்திரம் தரும்படி விண்ணப்பம் கிடைக்கப்பட்டிருக்கிறது. இக்கிராமசபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் உத்தரவுப்பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பினுல் மறுப்பதற்கான காரணத்தை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படு திகதியில் இருந்து பதினான்கு நாட்களுக்கிடையில் இணைப்பிரதியாக எங்களுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அட்டவணை

| விண்ணப்பதாரியின் பெயர் | விலாசம் | வியாபாரம்செய்யுமிடம் |
|---|---|---|
| (1) மீராசாய்பு ஐத்துருஸ் .. .. | .. சூடுவெந்தபுலவு, வவுனியா | .. சூடுவெந்தபுலவு (இறைச்சிக்கடை) |

அ. சிகாப்தீன்,
தலைவர்,
சி. செ. மே. கி. ச.

சின்னச்செட்டிகுளம் மேற்கு கி. ச. அலுவலகம்,
குரக்கள்புதுக்குளம், பூவரசன்குளம்,
1975 ம் ஆண்டு சனவரி மீ 03 ந் உ.

1-766—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

---

### குறிஞ்சாக்கேணி கிராம சபை

#### இறைச்சிக்கடைக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ் காணப்படும் அட்டவணையில் கூறப்பட்டுள்ளவரிடமிருந்து 1975 ஆம் ஆண்டுக்கு உத்தரவுப் பத்திரம் தருமாறு விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது.

இக்கிராம சபையின் நிர்வாக எல்லைக்குள் வாழ்ப்பவர்கள் எவரேனும் உத்தரவுப்பத்திரம் கொடுப்பதையிட்டு மறுக்க விரும்பினுல் அவர்கள் இவ் வர்த்தமானி விளம்பரத்திலிருந்து 14 நாட்களுக்குள் மறுப்பிற்கான காரணங்களைக்காட்டி இரு பிரதிகளில் எழுத்துமூலம் எமக்கு அனுப்பி வைக்கும்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அட்டவணை

| விண்ணப்பகாரரின் பெயர் | விலாசம் | வியாபாரம் செய்யுமிடம் |
|---|---|---|
| ஜனுப் கலால்தீன் அப்துல்லா | 1 ஆம் வட்டாரம், குறிஞ்சாக்கேணி | குறிஞ்சாக்கேணி மாட்டிறைச்சிக் கடை |

ம. மெய்தீன், ஜே.பி.,
தலைவர், குறிஞ்சாக்கேணி கிராமசபை.

கிண்ணியா,
1975 ம் ஆண்டு சனவரி மீ 07 ந் உ.

1-582—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149.

---

### ஏருவூர் பட்டின சபை

#### 1975 ம் ஆண்டுக்கான ஆதன வரி

#### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 256)

256 ம் அத்தியாயமான பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 159 ஆம் பிரிவின் கீழ் ஏருவூர் பட்டினத்துள் அமைந்துள்ள சகல நிலையான ஆதனங்கள் அனைத்திற்கும் சென்ற வருடத்தில் விதிக்கப்பட்டதுபோல் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு எட்டு வீதமான ஆதன வரி யொன்றை முறையே மார்ச் 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் சமதொகைகளாக நான்கு தவணைகளிற் செலுத்தப் படற்பாலதாக ஏருவூர் பட்டின சபை 1975 ம் ஆண்டுக்கு விதித்திருக்கிற தென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எம். ஏ. சி. ஏ. றகுமான்,
தலைவர்,
பட்டின சபை, ஏருவூர்.

பட்டின சபை அலுவலகம்,
ஏருவூர்,
1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.

1-580—31.01.75 ந் திகதிய வர்த்தமானி இல. 149

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக் கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளி யிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொளளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணை யில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினல் ஏற்றுக்கொளளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1975

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| சனவரி | வெள்ளி | 3.1.75 | 12 மதியம் | வெள்ளி | 27.12.74 |
| | வெள்ளி | 10.1.75 | 12 மதியம் | வெள்ளி | 3.1.75 |
| | வெள்ளி | 17.1.75 | 12 மதியம் | வெள்ளி | 10.1.75 |
| | வெள்ளி | 24.1.75 | 12 மதியம் | வெள்ளி | 17.1.75 |
| | வெள்ளி | 31.1.75 | 12 மதியம் | வெள்ளி | 24.1.75 |
| பெப்புருவரி | வெள்ளி | 7.2.75 | 12 மதியம் | வெள்ளி | 31.1.75 |
| | வெள்ளி | 14.2.75 | 12 மதியம் | வெள்ளி | 7.2.75 |
| | வெள்ளி | 21.2.75 | 12 மதியம் | வெள்ளி | 14.2.75 |
| | வெள்ளி | 28.2.75 | 12 மதியம் | வெள்ளி | 21.2.75 |
| மாச்சு | வெள்ளி | 7.3.75 | 12 மதியம் | வெள்ளி | 28.2.75 |
| | வெள்ளி | 14.3.75 | 12 மதியம் | வெள்ளி | 7.3.75 |
| | வெள்ளி | 21.3.75 | 12 மதியம் | வெள்ளி | 14.3.75 |
| | வியாழன் | 27.3.75 | 12 மதியம் | வெளளி | 21.3.75 |
| ஏப்பிறல் | வெள்ளி | 4.4.75 | 12 மதியம் | வியாழன் | 27.3.75 |
| | வெள்ளி | 11.4.75 | 12 மதியம் | வெள்ளி | 4.4.75 |
| | வெள்ளி | 18.4.75 | 12 மதியம் | வெள்ளி | 11.4.75 |
| | வியாழன் | 24.4.75 | 12 மதியம் | வெள்ளி | 18.4.75 |
| மே | வெள்ளி | 2.5.75 | 12 மதியம் | வியாழன் | 24.4.75 |
| | வெளளி | 9.5.75 | 12 மதியம் | வெள்ளி | 2.5.75 |
| | வெள்ளி | 16.5.75 | 12 மதியம் | வெள்ளி | 9.5.75 |
| | வெள்ளி | 23.5.75 | 12 மதியம் | வெள்ளி | 16.5.75 |
| | வெள்ளி | 30.5.75 | 12 மதியம் | வெள்ளி | 23.5.75 |
| யூன் | வெள்ளி | 6.6.75 | 12 மதியம் | வெள்ளி | 30.5.75 |
| | வெள்ளி | 13.6.75 | 12 மதியம் | வெள்ளி | 6.6.75 |
| | வெள்ளி | 20.6.75 | 12 மதியம் | வெள்ளி | 13.6.75 |
| | வெள்ளி | 27.6.75 | 12 மதியம் | வெள்ளி | 20.6.75 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆண்டு சனவரி மீ 01 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.